லாரியை மறித்து கரும்புகளை தின்ற காட்டு யானை

லாரியில் இருந்து கரும்பைப் பறிக்கும் காட்டு யானை.

சத்தியமங்கலம், ஆக. 1: சத்தியமங்கலத்தை அடுத்த காரப்பள்ளம் சோதனைச் சாவடியில் லாரியை வழிமறித்து அதிலிருந்த கரும்புகளை எடுத்த யானையால் சோதனைச் சாவடி ஊழியர்கள் அச்சமடைந்தனர்.

சத்தியமங்கலம் – மைசூரு தேசிய நெடுஞ்சாலையில் ஆசனூர் அருகே தமிழக, கர்நாடக மாநில எல்லையில் காரப்பள்ளம் வன சோதனைச் சாவடி அமைந்துள்ளது. இந்த சோதனை சாவடி வழியாக தாளவாடி மலைப் பகுதியில் இருந்து கரும்பு பாரம் ஏற்றிய லாரிகள் சத்தியமங்கலத்தில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைக்கு செல்வது வழக்கம்.

இந்நிலையில் கரும்பு பாரம் ஏற்றிய லாரி சோதனைச் சாவடி அருகே சனிக்கிழமை வருவதை கண்ட காட்டு யானை, சாலை ஓர வனப் பகுதியில் இருந்து வெளியேறி சோதனைச் சாவடி நோக்கி வந்தது. யானை வருவதைக் கண்ட வனத் துறை ஊழியர்கள் அச்சமடைந்தனர்.

இதற்கிடையே லாரி ஓட்டுநர் யானையைக் கண்டு அச்சமடைந்து லாரியை நிறுத்தியதும் யானை தனது தும்பிக்கையால் லாரியில் இருந்து கட்டுக்கரும்பை லாவகமாக பறித்துச் சாப்பிட்டது. காட்டு யானை லாரியில் வழிமறித்ததால் அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. சிறிது நேரம் கரும்புகளை ருசித்த காட்டு யானை பின்னர் மெதுவாக சாலையோரம் சென்றதைத் தொடர்ந்து வாகனங்கள் புறப்பட்டு சென்றன.

பாடந்தொரையில்

காட்டு யானைகளை விரட்ட கும்கிகள் வரவழைப்பு

பாடந்தொரை பகுதிக்கு அழைத்து வரப்பட்ட கும்கி யானை.

கூடலூர், ஆக. 1: கூடலூரை அடுத்துள்ள பாடந்தொரை பகுதியில் தொடர்ந்து குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்து சேதம் விளைவிக்கும் காட்டு யானைகளை விரட்ட சனிக்கிழமை இரண்டு கும்கி யானைகள் வரவழைக்கப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்டம், கூடலூரை அடுத்துள்ள பாடந்தொரை மற்றும் அதன் சுற்றுவட்ட ஊர்களில் தினமும் இரவு பகல் நேரங்களில் காட்டு யானைகள் புகுந்து பல்வேறு சேதங்களை ஏற்படுத்தி செல்கின்றன. இதனால் அப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். காட்டு யானைகள் ஊருக்குள் நுழைவதை தடுக்க வனத் துறையினர் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, வனத் துறையினர் முதல்கட்டமாக முதுமலை புலிகள் காப்பக முகாமிலிருந்து வசீம், ஜம்பு என்ற இரண்டு கும்கி யானைகளை பாடந்தொரை பகுதிக்கு கொண்டு வந்துள்ளனர். அவை வன எல்லையோரத்தில் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளன. இந்த கும்கிகள் வனத் துறையினருடன் இணைந்து யானைகளை விரட்டும் பணியில் ஈடுபடவுள்ளன.

குன்னூர் அருகே வாகனங்களை துரத்திய ஒற்றை யானை

நஞ்சப்பசத்திரம் பகுதியில் சாலையின் குறுக்கே நின்ற காட்டு யானை.

உதகை, ஆக. 1: குன்னூர்– மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலையில் ஒற்றை காட்டு யானை வாகனங்களைத் துரத்தியதால் வாகன ஓட்டிகள் அச்சமடைந்தனர்.

சமவெளிப் பகுதியான மேட்டுப்பாளையம், சிறுமுகை, சத்தியமங்கலம் போன்ற பகுதிகளில் வறட்சி நிலவுவதால் காட்டு யானைகள் நீலகிரி மாவட்டத்துக்கு வரத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில் கூட்டத்தில் இருந்து பிரிந்த ஒற்றை யானை குன்னூர்– மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள நஞ்சப்பசத்திரம் பகுதியில் சுற்றித் திரிந்தது. அப்போது அந்த யானை, சாலையில் வந்த வாகனங்களை துரத்தியது. இதன் காரணமாக வாகன ஓட்டிகள் அச்சமடைந்தனர். சாலையில் சிறிது நேரம் ஆக்ரோஷமாக உலவிய அந்த ஒற்றை காட்டு யானை பின்னர் அருகிலிருந்த சோலைப் பகுதிக்குள் சென்றது.

குன்னூர்– மேட்டுப்பாளையம் நெடுஞ்சாலையில் ஒற்றை யானை முகாமிட்டுள்ளதால், வாகன ஓட்டிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் காட்டு யானைகளை புகைப்படம் மற்றும் விடியோ எடுக்க வேண்டாம் என்று வனத் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு: பெருந்துறையில் மாவட்ட ஆட்சியர் ஆய்வு

பெருந்துறை, ஆக. 1: பெருந்துறை ஒன்றியம், கருமாண்டிசெல்லிபாளையம்பேரூராட்சிப்பகுதியில்மக்கள் தொகை கணக்கெடுப்பு–2027 முதற்கட்ட வீட்டு பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்புப் பணிகளை மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி சனிக்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி பெருந்துறை பகுதிகளில் கணக்கெடுப்பாளர்கள்வீடுதோறும்சென்று மேற்கொண்டு வரும் வீட்டு பட்டியலிடல் பணிகள், குடும்ப விவரங்கள் பதிவு செய்யப்படும் முறை, அரசால் வழங்கப்பட்டுள்ள மின்னணு சாதனங்கள் (மொபைல் செயலி) மூலம் தகவல்கள் பதிவேற்றம் செய்யப்படும் விதம், கணக்கெடுப்பு நடைமுறைகள், தரவுகளின் துல்லியம் மற்றும் பணிகளின் முன்னேற்றம் ஆகியவற்றை ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், கணக்கெடுப்புப் பணியாளர்களிடம் பொதுமக்களை கனிவுடன் அணுகி, அரசின் வழிகாட்டுதலின்படி ஒவ்வொரு குடும்பத்தின் விவரங்களையும் முழுமையாகவும், துல்லியமாகவும் பதிவு செய்ய வேண்டும் என அறிவுறுத்தினார்.

இதைத் தொடர்ந்து, பெருந்துறை நகராட்சியில் செயல்பட்டு வரும் முழு நேர கிளை நூலகத்தைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதில், ஆட்சியர் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி, பெருந்துறை வட்டாட்சியர் செல்வகுமார், கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் பாலசுப்பிரமணியம் உள்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சிப் பகுதியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியை ஆய்வு செய்யும் ஆட்சியர் ச.கந்தசாமி.

குன்னூரில் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம்

உதகை, ஆக. 1: குன்னூர் பிராவிடென்ஸ் மகளிர் கல்லூரியில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் சார்பில் நடைபெற்ற இந்த முகாமில் பல்வேறு துறைகளைச் சார்ந்த 112 முன்னணி தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டு, தங்களுக்குத் தேவையான பணியாளர்களைத் தேர்வு செய்தன.

இந்த வேலைவாய்ப்பு முகாமில் நீலகிரி மாவட்டம் முழுவதிலும் இருந்து ஏராளமான வேலைதேடுபவர்கள் கலந்துகொண்டனர். பொதுப் பிரிவில் 396 ஆண்கள், 586 பெண்கள் என மொத்தம் 982 பேர் பங்கேற்றனர். மாற்றுத்திறனாளிகள் பிரிவில் 8 ஆண்கள், 4 பெண்கள் என மொத்தம் 12 பேர் கலந்துகொண்டனர்.

பொதுப் பிரிவில் 116 ஆண்கள், 291 பெண்கள் என மொத்தம் 407 பேர் தேர்வு செய்யப்பட்டனர். மாற்றுத்திறனாளிகள் பிரிவில் 5 ஆண்கள் தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டன.

இந்த முகாமில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குவதற்காக 3 திறன் பயிற்சியாளர்கள் பங்கேற்றனர்.

இவர்களிடம் தங்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் மொத்தம் 42 வேலை தேடுபவர்கள் தங்களது பெயர்களைப் பதிவு செய்து கொண்டனர்.

நவரசம் மெட்ரிக். பள்ளியில் விளையாட்டுப் போட்டிகள்

செய்தித்தாள்களை உடைகளாக தயாரித்து அணிந்து வந்த மாணவ, மாணவிகளுடன் பள்ளி நிர்வாகிகள்.

மொடக்குறிச்சி ஆக. 1: மொடக்குறிச்சி ஒன்றியம், பள்ளியூத்து நவரசம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 80–ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

இதையொட்டி, மாறுவேடம், பேச்சு, ஓவியம், கட்டுரை உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. சனிக்கிழமை நடைபெற்ற இதற்கான பரிசளிப்பு விழாவில், பள்ளி நிர்வாகிகள் கலந்து கொண்டு வெற்றிபெற்ற மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினர்.

இதில், பள்ளி மாணவ, மாணவியர் செய்தித்தாள், காய்கறிகள், பழங்கள் வடிவத்தில் உடைகளை அணிந்து வந்தனர்.

பள்ளித் தலைவர் எம்.பழனிசாமி, செயலாளர் மற்றும் தாளாளர் பி.சி. பெரியசாமி, பொருளாளர் டி.சி. சின்னசாமி, முதல்வர் எஸ்.பரமேஸ்வரி உள்ளிட்டோர் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.

கூடலூர் அருகே காட்டு யானை தாக்கி தொழிலாளி உயிரிழப்பு

கூடலூர், ஆக. 1: கூடலூர் அருகே தேவாலா பகுதியில் காட்டு யானை தாக்கியதில் தொழிலாளி சனிக்கிழமை உயிரிழந்தார்.

காட்டு யானை தாக்கி உயிரிழந்த பாலசுப்பிரமணியம்.

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், தேவாலா 3–ஆவது சரகம் பகுதியில் வசித்து வந்தவர் பாலசுப்பிரமணியம் (70). இவர், கரிய சோலை பகுதியிலுள்ள தனியார் காபி தோட்டத்தில் தொழிலாளியாகப் பணியாற்றி வந்தார்.

பாலசுப்பிரமணியம் வழக்கம் போல சனிக்கிழமை தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த காட்டு யானை அவரைத் தாக்கியது. மழை மற்றும் மேகமூட்டம் அதிகமாக இருந்ததால் காபி தோட்டத்தின் அருகில் யானை நின்றுகொண்டிருந்தது தெரியவில்லை. யானை தாக்கியதில் நிலைகுலைந்து அவர் சப்தம் எழுப்பவே, அருகிலிருந்தவர்கள் ஒன்றுகூடி ஒலி எழுப்பினர். இதையடுத்து யானை அங்கிருந்து விலகியது. பின்னர், வனத் துறை மற்றும் காவல் துறைக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த வனத் துறையினர் சடலத்தை மீட்டு பந்தலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். அங்கு உடற்கூறாய்வுக்குப் பிறகு உறவினர்களிடம் அவரது உடல் ஒப்படைக்கப்பட்டது.

பண்ணை நிலம் விற்பனைக்கு
பொள்ளாச்சி - பாலக்காடு மாநில நெடுஞ்சாலையில் இருந்து 100 மீட்டர் தொலைவில்
வடக்கிபாளையம் அருகில்
54 ஏக்கர் பரப்பளவில் பண்ணை நிலம்
PHASE-I
10 ஏக்கர் பண்ணை நிலம்
10 சென்ட் முதல் 25 சென்ட் வரை விற்பனைக்கு உள்ளது
(23.08.2026 புக்கிங் ஆரம்பம்)
PHASE-II
22 ஏக்கர் DTCP லேஅவுட்
PHASE-III
ரிசாட்ஸ் ப்ராஜெக்ட்
23.08.2026 பண்ணைநிலம் திறப்பு விழா ஆரம்பம்
இடத்தை பார்வைிடவும், விபரங்கள் அறியவும்
97881 55888

கைவிரல் ரேகை பதிவு செய்ய ரேஷன் கடைகளில் இன்று சிறப்பு முகாம்

ஈரோடு, ஆக. 1: ஈரோடு மாவட்டத்தில் கைவிரல் ரேகை பதிவு செய்ய மற்றும் கண் கருவிழி சரிபார்க்க அனைத்து ரேஷன் கடைகளிலும் சிறப்பு முகாம் ஞாயிற்றுக்கிழமை (ஆகஸ்ட் 2) நடைபெற உள்ளது.

இது குறித்து ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழகம் முழுவதும் ரேஷன் கடைகளில் கைவிரல்ரேகைபதிவுமற்றும்கண்கருவிழிசரிபார்ப்பு மேற்கொள்ளாத அனைத்து குடும்ப அட்டை பயனாளிகளுக்கும் அனைத்து ரேஷன் கடைகளிலும் விற்பனை முனைய இயந்திரம் மூலமாக விரல் ரேகை மற்றும் கண் கருவிழி சரிபார்ப்பின் மூலம் இகேஒய்சி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, ஈரோடு மாவட்டத்தில் இகேஒய்சி பதிவினை 100 சதவீதம் நிறைவு செய்யும் வகையில் அனைத்து ரேஷன் கடைகளிலும் ஞாயிற்றுக்கிழமைசிறப்பு முகாம் நடத்தப்பட உள்ளது. சிறப்பு முகாமில் கைவிரல் ரேகை பதிவை மேற்கொள்ளாத குடும்ப அட்டைதாரர்கள் கைவிரல் ரேகை பதிவு செய்து பயன்பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

STAR Health Insurance
ஸ்டார் ஹெல்த் அண்டு அலைடு இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
பதிவு அலுவலகம்: எ.1, தியூடோர் தெரு, வண்ணாரப்பேட்டை, தெற்கு சென்னை, நுங்கம்பாக்கம் சென்னை - 600 034.
கார்ப்பரேட் அலுவலகம்: எண்: 148, அண்ணாசாலை, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, மயிலாப்பூர், சென்னை - 600004. தொலைபேசி: 044 47809700
வலைதளம்: www.starhealth.in மின்னஞ்சல்: customer@starhealth.in
CIN: U66010TN2006PLC060366 IRDAI பதிவு எண். 129

21-ஆம் ஆண்டு பொதுக்குழு கூட்டத்திற்கான அறிவிப்பு

AGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பிசினஸை முறைப்படி பரிவர்த்தனை செய்ய, ஸ்டார் ஹெல்த் அண்ட் அலைடு இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் ("கம்பெனி") உறுப்பினர்களின் இருபத்தி ஒன்றாவது ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் ("AGM") வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 28, 2026 மாலை 4.00 மணிக்கு (IST) வீடியோ கான்பரன்சிங் (VC)/பிற ஆடியோ விஷுவல் வழிமுறைகள் ('OAVM') மூலம் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஏப்ரல் 8, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண் 14/2020 மற்றும் இது தொடர்பாக வெளியிடப்பட்ட அடுத்தடுத்த சுற்றறிக்கைகளின்படி, சமீபத்தில் வெளியிடப்பட்ட, கார்ப்பரேட் விவகார அமைச்சகம் (MCA) செப்டம்பர் 22, 2025 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண் 03/2025 மற்றும் செக்யூரிட்டீஸ் அண்டு எக்ஸ்சேஞ்ச்போர்ட் ஆஃப் இண்டியா (SEBI) அக்டோபர் 3, 2024 தேதியிட்டு வெளியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2024/133 படியும், 21வது ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தின் அறிவிப்பு மற்றும் 2025-26 நிதியாண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் ('ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கை') உள்ளிட்ட ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கை, ஜூலை 24, 2026 வெள்ளிக்கிழமை வணிக நேரத்தின் முடிவில் நிறுவனம் / பதிவாளர் & பரிமாற்ற முகவர் ('RTA') / நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் ('NSDL') / சென்ட்ரல்டெபாசிட்டரி சர்வீசஸ் லிமிடெட் ('CDSL') ஆகியவற்றில் பெயர்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரிகள் பதிவுசெய்துள்ள உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் அனுப்பப்படுகின்றன. கூடுதலாக, SEBI (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள் 2015 ('SEBI LODR') இன் விதிமுறை 36(1)(b) இன் படி, நிறுவனம்/RTA/NSDL/CDSL இல் தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத உறுப்பினர்களும், 2025-26 நிதியாண்டிற்கான ஆண்டு அறிக்கையை அணுகக்கூடிய விதமாக, நிறுவனத்தின் வலைத்தள இணைய இணைப்பைக் கொண்டுள்ள கடிதமும் நிறுவனம் அனுப்புகிறது.

ஆண்டு பொதுக்குழு கூட்ட அறிவிப்பு உட்பட்ட ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கை, நிறுவனத்தின் இணையதளமான www.starhealth.in இல் கிடைக்கிறது, NSDL இணையதளமான www.evoting.nsdl.com இல் கிடைக்கிறது, CDSL இணையதளமான www.evotingindia.com இல் கிடைக்கிறது மற்றும் பங்குச் சந்தைகளின் இணையதளங்கள், அதாவது இந்திய தேசிய பங்குச்சந்தை இணையதளமான www.nseindia.com இலும், BSE லிமிடெட் இணையதளமான www.bseindia.com இலும் கிடைக்கிறது.

நிறுவனம் தனது அனைத்து உறுப்பினர்களுக்கும் VC/OAVM மற்றும் மின்னணு வாக்குப்பதிவு வசதியை வழங்குவதற்காக, M/s. KFin டெக்னாலஜீஸ் லிமிடெட்('KFin') என்ற RTA நிறுவனத்தின் சேவைகளைப் பெற்றுள்ளது.

ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தின்போது தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் மின்னணு வாக்குப்பதிவுக்கான வழிமுறைகள்

- நிறுவனங்கள் சட்டம் 2013 இன் பிரிவு 108, நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014 இன் விதி 20 மற்றும் SEBI LODR இன் ஒழுங்குமுறை 44 உடன் படிக்கப்பட்டபடி, நிறுவனம் தனது உறுப்பினர்கள் ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட முன்மொழியப்பட்ட தீர்மானங்களுக்கு மின்னணு முறையில் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்த மின்னணு வாக்களிப்பு வசதியை வழங்கும். வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 21, 2026 அன்று ('கடைசி நாள்') வேலைநேர முடிவின்போது உறுப்பினர் பதிவேட்டில் பெயர் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதியைப் பெற உரிமை பெறுவார்கள்.
- உறுப்பினர்கள் ஆண்டு பொதுக்குழு கூட்டத்திற்கு முன்பு தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதியைப் பயன்படுத்தித் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யலாம். தீர்மானத்தின் மீது வாக்களித்த பிறகு, உறுப்பினர் அதைத் தொடர்ந்து மாற்றவோ அல்லது மீண்டும் வாக்களிக்கவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள். உறுப்பினர் ஒருவர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களித்த பிறகும்கூட ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்கலாம், ஆனால் கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்.
- தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு காலம் ஆகஸ்ட் 25, 2026 செவ்வாய்க்கிழமை காலை 10:00 மணிக்கு (IST) தொடங்கி வியாழக்கிழமை, ஆகஸ்ட் 27, 2026 மாலை 5:00 மணிக்கு (IST) முடிவடையும். அதன் பிறகு வாக்களிப்பதற்கான தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு Kfin ஆல் முடக்கப்படும். உறுப்பினர்களின் வாக்களிக்கும் உரிமையானது, கடைசி நாளின்படி நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனத்தில் அவர்களின் பங்குகளுக்கு விகிதாசாரமாக இருக்கும்.
- அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு நிறுவனத்தின் பங்குகளைப் பெற்று, கடைசி நாளின்படி பங்குகளை வைத்திருந்து நிறுவனத்தின் உறுப்பினராகிவிட்ட ஒருவர், மின்னணு வாக்களிப்பு மற்றும் அனைத்து தகவல்தொடர்புகளையும் மின்னணு முறையில் பெறுவதற்கான கோரிக்கையை einward.ris@kfintech.com என்ற முகவரிக்கு அனுப்புவதன் மூலம் லாகின் ID மற்றும் பாஸ்வேர்டைப் பெறலாம்.
- தொலைதூர வாக்கெடுப்பு மூலம் வாக்களிக்காமல் ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள், ஆண்டு பொதுக்குழு கூட்டத்தின்போது வாக்களிக்கலாம். தொலைதூர வாக்கெடுப்பு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள், ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ளலாமே தவிர ஆண்டு பொதுக்குழு கூட்டத்தின்போது வாக்களிக்க முடியாது.
- ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் இணைவதற்கான விரிவான வழிமுறைகள் மற்றும் ஆண்டு பொதுக்குழு கூட்டத்தின்போது தொலைதூர மின்னணு வாக்களிப்பில் பங்கேற்பது அல்லது மின்னணு வாக்களிப்பு முறை மூலம் வாக்களிப்பது எப்படி என்பது அறிவிப்பில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.
- மின்னணு முறையில் வாக்களிப்பது தொடர்பாக ஏதேனும் சந்தேகம் மற்றும்/அல்லது குறைகள் இருந்தால், உறுப்பினர்கள் https://evoting.kfintech.com (KFin வலைத்தளம்) இன் பதிவிறக்கப் பிரிவில் கிடைக்கும் உதவி & அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQகள்) மற்றும் மின்-வாக்களிப்பு பயனர் கையேட்டைப் பார்க்கலாம் அல்லது evoting@kfintech.com அல்லது einward.ris@kfintech.com இற்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது KFin இன் கட்டணமில்லா எண் 1-800-309-4001 ஐ அழைக்கலாம்.
- மின்னணு வாக்குப்பதிவு செயல்முறையை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடத்துவதற்காக, சென்னையைச் சேர்ந்த பயிற்சி நிறுவனச் செயலாளரான திரு. மிர்சா இம்மாயில் இர்ஷாத் அகமதுவை நிறுவனம் ஆய்வாளராக நியமித்துள்ளது. ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் முடிவடைந்த 48 மணி நேரத்திற்குள், நிறுவனம் வாக்குப்பதிவு முடிவுகளை https://www.starhealth.in என்ற இணையதளத்தில் அறிவித்து, நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பங்குச் சந்தைகளுக்குத் தெரிவிக்கப்படும்.

இந்த அறிவிப்பு MCA மற்றும் SEBI இன் பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளுக்கு இணங்கு நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களின் தகவலுக்காகவும், நலனுக்காகவும் வெளியிடப்படுகிறது.

இயக்குநர்கள் குழுவின் ஆணைப்படி
ஸ்டார் ஹெல்த் அண்டு அலைடு இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்-க்காக
ஜெயஸ்ரீ சேதுராமன்
நிறுவனச் செயலாளர்

தேதி: 31-07-2026
இடம்: சென்னை
STAR

UCO BANK HONOURS YOUR TRUST
கோபிசெட்டிபாளையம் கிளை : எண்.22, மொடச்சூர் ரோடு, கோபிசெட்டிபாளையம் – 638476, ஈரோடு மாவட்டம்.
போன் : 04285 - 225200, இமெயில் : gobich@ucobank.co.in

[விதி-8(6)] அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான பொது அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002–ன் உடனிணைந்த விதி 8(6) ன் படி அடமானம் வைக்கப்பட்ட அசையாச் சொத்துக்களை விற்பனை செய்யும் இ–ஏல விற்பனை அறிவிப்பு. இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் பிணையாளி(கள்) க்கு தெரியப்படுத்துவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையும் மற்றும் அசையாச் சொத்து, யூகோ வங்கியின் அதிகாரம் பெற்ற அலுவலர் சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(4)ன் கீழ் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை அடையாள கையகப்படுத்துதியுள்ளார் மற்றும் அடமானச் சொத்துக்களை 'எங்குள்ளதோ உள்ள நிலையில்', 'என்ன நிலையில் உள்ளதோ உள்ளபடியே' மற்றும் 'எப்படி உள்ளதோ அப்படியே' என்கிற அடிப்படையில் யூகோ வங்கிக்கு கடன்தாரர்

கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர்களின் பெயர் மற்றும் முகவரி
கணக்கின் பெயர் : கடன்தாரர் : M/s. ஸ்ரீ கணபதி ஆட்டோ பார்ட்ஸ், எண்.4, முத்துசா வீதி, கோபிசெட்டிபாளையம் – 638 476.
உரிமையாளர் : திரு.K.மாரிமுத்து, த/பெ.கருப்ப போயன், எண்.9/9, பிள்ளையார் கோவில் வீதி, ஒட்டர்காட்டுப்பாளையம், காட்டுப்பாளையம் அஞ்சல், கோபிசெட்டிபாளையம் – 638 457.
உத்தரவாதமளித்தவர் : K.வெங்கடாசலம், த/பெதிரு. கருப்ப போயன், எண்.6/9, கணக்குப்பிள்ளை வீதி, காட்டுப்பாளையம் அஞ்சல், கோபிசெட்டிபாளையம்–638457.

கேட்பு அறிவிப்பு தேதி : 22.06.2021.
கையகப்படுத்திய தேதி : 28.09.2021.
வங்கிக்குச் செலுத்த வேண்டிய கடன் பாக்கித் தொகை : கேஷ் கிரெடிட் : ரூ.24,32,253.71, வட்டி 31.05.2026 வரை
டெர்ம் லோன் I : ரூ.3,32,855.86,
டெர்ம் லோன் II : ரூ.1,13,093.00
மொத்தம் ரூ.28,78,202.57 – 01.08.2026 வரை. வட்டி, டெர்ம் லோன்களுக்கு 29.06.2026 வரை மற்றும் பின்வட்டி, இதர செலவுகள் மற்றும் கட்டணங்கள்.

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.11,70,000/- | முன்வைப்புத் தொகை : ரூ.1,20,000/- | முன் மடங்கு : ரூ.50,000/-

சொத்து விவரம் : கோபிசெட்டிபாளையம் பதிவு மாவட்டம், சத்தியமங்கலம் சார் பதிவு மாவட்டம், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் தாலூகா, தாடப்பள்ளி கிராமம், பழைய சர்வே எண்.244 D, புதிய சர்வே எண்.263/3, இதிலுள்ளதும் அதன் பகுதியுமான 0.72.0 புஞ்சை ஹெக்டேரில் 4356 சதுரடி காலி நிலம். எல்லைகள் : வடக்கே – பழனியப்பன் நிலம், கிழக்கே – தென்வடல் வழி மற்றும் மாரபோயனின் வீடு, தெற்கே – பெருமாள் போயன் மற்றும் பழனியப்பனுக்குச் சொந்தமான பள்ளம்பாளையம் ரோட்டிலுள்ள வீடு, மேற்கே – தென்வடல் ரோடு. இதில் கிழமேல் வடபுறம் 63 அடி, கிழமேல் தென்புறம் 69 அடி, தென்வடல் மேற்புறம் 66 அடி, தென்வடல் கிழபுறம் 66 அடி, என 4356 சதுரடி நிலம். இச்சொத்து கருப்ப போயன் மகன் திரு.K.மாரிமுத்து மற்றும் கருப்ப போயன் மகன் திரு.K.வெங்கடாசலம் ஆகியோருக்குச் சொந்தமானது. விற்பனைப் பத்திர எண்.270/2002.

குறிப்பு : 2002 சர்பாஸி சட்டம் பிரிவு 13(2) ன் கீழ் 22.06.2021 தேதியில் அறிவிப்பு வழங்கப்பட்டது. தொகை விபரம் : கேஷ் கிரெடிட்டிற்காக : ரூ. 11,57,295/–, டெர்ம் லோன் I–க்காக : ரூ.2,08,807/–, டெர்ம் லோன் II–க்காக : ரூ. 68,227/– மொத்தம் ரூ.14,34,329 /– (22.06.2021 தேதி வரை சேர்த்துள்ள வட்டியுடன்)

ஏலம் நடைபெறும் தேதி மற்றும் நேரம் : 11.09.2026 (வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணி முதல் 5 மணி வரை
(ஒவ்வொன்றும் 10 நிமிட எண்ணற்ற தன்னிச்சையான நீட்டிப்புகளுடன் மற்றும் ஏலக் கேட்பு ரூ.0.50 லட்சத்தின் மடங்குகளில்).
முன்வைப்புத் தொகையுடன் ஏலக்கேட்பு சமர்ப்பிக்கக் கடைசித் தேதி அன்று அல்லது முன்னதாக : 11.09.2026 (வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணி.

நிபந்தனை விபரங்கள் : 1. இந்த விற்பனைக்கு உட்பட்ட நிபந்தனைகள் பிணைய நலன் அமலாக்கம் விதிகள் 2002ல் பரிந்துரைக்கப்பட்டது. விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்கள் கீழ்க்கண்ட இணையதளங்களில் கிடைக்கும் / பிரகரிக்கப்பட்டுள்ளது. I) https://baanknet.com II) https://www.uco.bank.in 2. இச்சொத்துக்கள் 'எங்குள்ளதோ உள்ள நிலையில்', 'என்ன நிலையில் உள்ளதோ உள்ளபடியே' மற்றும் 'எப்படி உள்ளதோ அப்படியே' என்கிற அடிப்படையில் விற்பனை செய்யப